ஹாமீம்

நபிமுகம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு
அலைஹிவசல்லமவர்கள் மீதும்
முஹையத்தீனப்துல் காதிறு ஜெய்லானி
ஆண்டகையவர்கள் மீதும் பாடிய

# மதியமிர்தமாலிகை

இஃது

மதுராப்பந்தாத்ராகரக்கவிச் சக்ரவர்த்தி யென்னும்
உமறுப்புலவரவர்களின் ஆறாவது பௌத்ரரும்
அ. ப. காதிறு முஹையத்தீனண்ணாவியவர்களின் புத்ரரும்
அகமியஞானச்சிந்து, அதிநூதனவலங்காரக்கீர்த்தனை,
மதியமிர்தச்சிந்து, மதியமிர்தரத்னம், மதியமிர்த
புஞ்சம், மதியமிர்தபஞ்சரி, மதியமிர்தாஞ்சிக
தெம்மாங்கு, வடைப்பாட்டு, போலிப்புல
வன் மேகவிச்சிந்து, பஞ்சரத்தினத்
திருப்புகழ், கஸ்தூரி பகத்வச்
சிந்து முதலிய நூற்களின்
ஆசிரியரும் வித்வஜ்ஜன சேகரரும்
ஆயுள்வேத பாஸ்கரருமாகிய
பண்மொழி
அ. ப. கா. ஷெய்க்முஹம்மது முஹையத்தீனண்ணாவி
யென்னும்

## முத்தமிழ் வித்வான்

மதியமிர்தப்புலவரவர்களாலியற்றி

தென்காசி,
...ம்பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.
...ற்பதிப்பு காப்பி 1000.
**1924.**
[அணா 2.

97:417
NV4
18128

ஹாமீம்

# மதியமிர்த மாலிகை.

## வெண்பா

---

சீராரும் மாமுகைய தீனப்துல் காதிரோலி
பேராருங் கீதமதைப் பேசவே = ஊராரும்
பக்க வருடந்த பாக்கியனை யுஞ்செல்வ
மக்கநகர் வேந்தரையும் வாழ்த்து.

---

இராகம். பியாக தாளம் ரூபகம்

பல்லவி

நாயனைத்துதி மனமே அநுதினம்
நாயனைத்துதி மனமே நா.

சரணுநுபல்லவி

தூயனைச்சுயஞ்சோதி நேயனைய திபனை
சோமாதி சோமனைச் சுகமுத்ரை லோலனை நா.

ஆலமனைத்தையும்மோ ரணுவினுள்ளமைத்துப்பின்
ஆசையாயதில்மனைந் தானந்தம்மாகிய நா.

மாதாவயிற்றுள் வைத்து வளர்த்து வெளியிலாக்கி
மாராயமதைத்தந்து சீராக நித்யங்காக்கும் நா.

நாளைமருசர்தன்னில் நமைக்காக்கும்படியாதி
நாதாந்தமுறைம்மதை வேதாந்தமாய்த் தந்த நா.

மாமதியமிர்தஞ்சொல் மதுகாமிகப்பொங்கும்
மாமக்கமதினம்வாழ் மஹமூதர் துணைகொண்டு நா.

---

இராகம். ஸ்ரீ தாளம் ஆதி:

பல்லவி

பாதாரவிந்தம் நம்பினேன்,
பயல்நிதமும் வெம்பினேன் (பாதார

அநுபல்லவி

நாதாநதிசூழ்மக்க வேதாநிதந்துதிக்க
நவாசமதுரித கவிமதியமிருதம்— (பாதார)

சரணம்

தாதா சகல நபிமார்கள்ச மேதா
சையதிறசூலெனுஞ் சற்குரு நீதா
சூதா தமியன்கவி சொன்னறமோ தாதா
சுகிர்த ரஞ்சிதகுணா சுவர்க்கவி நோதா
சுகந்தமான்மத வாசனை
யுகந்ததேக வஜீகரப (பாதார)

இராகம் சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி

முகம்மதான சுகிர்த ஞான
மோனபி ஷேகமுத்திரை (முகம்)

அநுபல்லவி

முதிருந் துதிகொள் எதிபர்தீனில்
முழங்குமிங்கித மறைவிஜித்திர— (முகம்)

தொகையறு

சுகுணசுப சோபனச் சொல்லுதயரத்தினச்
சுத்தசைதன்ய மார்க்கம்
சுருதிமுதலறிவெலாந் தோன்று பலவுயிரெலாந்
துதிமதுரமான தீர்க்கம்.

பாட்டு

ஜோலிசிங்காரப் பக்கம்
சுகந்த நாத மக்கம்.
வலியவள்ம பக்கம்
மதியமிர்தத் துதியதுபுரி
சுதிநிதைதயி பதிபதியெனும்

இராகம் கல்யாணி தாளம் ஆதி.

பல்லவி

மக்க மா மணியே பதம்
வாழ்த்திடும் பணி செய்வாயே— (மக்க)

அநுபல்லவி

மக்கம் நடுப் பக்கம் மனஞ்
சி[illegible] வருள்

சரணம்

முக்கனிரசமே ஞான
ஜூஹூப் மஜீதய ருள்வி கான
ஹக்கனைப்பொருந்தும் மோன
காசீம் யாஸீம் தாஸீ மான— (மக்க)

அப்துல்லா தவக்கு மார
அஹமது மகே திருவு தார
சப்தகாமிதலா யீங் கார
சாக்ஷி யாக்ஷி காக்ஷி கூற— (மக்க)

மங்குலக்குடைவி னோத
மதியமிர்தம்பாடும் வேத
பங்கயமெனும்பொற் பாத
பாசம் நேசம் வீசும் நாத— (மக்க)

---

இராகம், இந்துஸ்தான் கவாய் தாளம் ஆதி.

பல்லவி

காஷீமே கருணை புரியுந்தநி— காஷீ.

அநுபல்லவி

காஷீமே கமழுந் தாஷீமே சரணம்— காஷீ.

சரணம்

தோஷியெனுங் கொடிய தூர்த்த ராம் பாவி
அடித்துவிழப் பதுருப் படையதில் மேவி
பேசுந்தமதிகாரப் பிடிமண லேவி

பெற்றவழி முற்றும்விழ
வெற்றிபுரி நற்றவமெய்— காஷீ

பாஷைபலதுந் தெரி பாக்யவி நோதா
பலவுபிரினத் தொடு பகரும்வி தாதா
வாசனைகதம்பரி மளிக்குஞ்ச மேதா

மங்குலத்து தங்கிவர
வுங்கிருபை யக்கருணை— காஷீ

பாசமுடனேயாதி பசனவன் நாடி
பரிவுள ரகசியம் பகர்ந்தது கோடி
தேசமெல்லாந் திவ்யதீன்கொடி யாடி

தித்திக்கிடு புத்தமுத
முத்திக்கனி மெத்தக்கரு காஷீ

ஆசுமதுர கவிக் கானந்த மூலம்
அதிபதியுமி மாபாகிய சீலம்
தாஸன் மதியமிர்தந் தமிழ்க் கநுகூலம்

தந்துதவ அந்திபகல்
மந்த்ரமாய் வந்தருளி— காஷீ

---

இராகம் பைரவி தாளம் ஆதி

பல்லவி அடுக்குச்சந்தம்

திருவளர் பொட்டல்பு தூரா ஆதி
செய்பதிறகுலின் பேரா திரு.

திரந்தரும்பிரபல்ய வரந்தருங்கைவல்ய திரு.

தீதிலாத மாதுபாத்தி மாதவவிலாச நேர்த்தி திரு.

தினகரனதை வினயமொடதி
வனசமதிதன மணமகிழ் புரி திரு.

திக்கெட்டும்புகழ் பரகதியைக்
கைக்கெட்டும்படி வரமருளும் திரு.

திருட்டு முருட்டுங் கற்ற
புரட்ட னதிஷ்டம் பெற்ற திரு.

தேவைக்கூசிடை பிணகலி
மாவைப்பூசனை புரி தவ திரு.

தீனுக்காதா வாகியமெய்ப் பெரு
மானுக்காதிமநோகர சற்குரு திரு.

சரணம்

சருவ நிரஞ்சன சத்ய விநோதா
சங்கொலிநாதச் சாமணிப்பாதா
புருவ நடுவில் நடமிடும் போதா
பூரணஞானமெய்ப் பொக்கிஷத்தாதா

பூத மடங்கி வணங்கிட
சீதசுகந்த வலங்கிர்த
வேத மிலங்க மகிழ்ந்தணி
நீதமதந் தாரம்பிடுந் திரு.

கருணைதவழப் துல் காதிரென்றோடி
கண்ணியமாய் வருவர் கோடா கோடி
தருணந்தனில் மதியமிர்தம் பண்பாடி
சன்னதிவந்த தமியனைத்தேடி

தாமத மென்பதகன்றிட
நாமமியைந்து புகன்றொரு
மாமணமெங்கு மலிந்தசிந்
தாமணி செய்பதுமந்தரும் திரு

---

இராகம் இந்துஸ்தான் கவாய் தாளம் ஆதி.

கண்ணிகள்

தீன் கொடிக்குள் தங்கும் பதம்
ஷெய்கு முகைதீன் புண்ய
வான்பிடிக்கலாஞ் சிந்தைக்கு
வாய்த்த நறுந்தேன் திருத் தீன்

ஆலமெல்லாந் தீன்பயிராய்
அமர்ந்த முகைதீன் புகழ்
ஆல நபி பேர ரென்னும்
அருமை முகைதீன திருத் தீன்.

ஆதியொளிவிற்பிறந்த அற்புதத்தோராம் பெருஞ்
ஜோதிமுச்சுடரி லொன்றாய்த்துணைபுரிந்தோராம்

பூவிலொலிமார் துதிக்கும்
புண்யரானோ ராம் நல்லோர்
நாவில் விளையாடும் மருள்
நாயகத் தோராம் திருத் தீன்.

துய்ப விறை யோனருஷிற்
றுயில் புரிந்தோராம் செல்வ
செய்பதப்துல் காதிரென்னும்
சிரேஷ்ட ராணோராம் திருத். தீன்.

ஆதிரசூமானெழுத்தை
அகற்றி வைத்தோராம் பெருஞ்
ஜோதியொளிமேவு மெழில்
சுந்தரத் தோராம் திருத் தீன்

எறும்புகடை யானைமுதல்
இறைஞ்ச வந்தோராம் ஞானக்
கரும்பு தந்துஞ்சுவை நிரைத்த
கற்பகத் தோராம் திருத் தீன்.

பூதஜின் பசாசு வகை
போற்றவந்தோராம் பாவா
ஆதமுதல் தோற்றத்திற்கும்
அன்புதந்தோராம் திருத் தீன்.

மாமதியமிர்தந் தமிழ்
மனமூவந்தோராம் இப்போ
தாமதஞ்செய்யாமல ருள்
தரவருவோராம் திருத் தீன்

---

இராகம் தோடி தாளம் ஏகம்

கருணையங்கவுதுல்ஸமதானி அருள்புரியுங்
காதிர் முகைபதீனே ஜெய்லானி
சரணையனுதினமுந் தமியேன் மனதில்வைத்து
கருணையதுபுரியுங் கண்மணியதானமுத்துக்
கற்பகத்தருவே முகைதீனி நம்புமடியன்
காட்சிகண்டிடச் செய்சமதானி

அருஷிலுரங்கு மதிஜபப்பூபா புகழாலமெல்லாம்
ஆக்கினைசெலுத்தும்பிரஸ்தாபா
சுருதியெல்லாந்துதிக்குஞ் சுல்தான் முகைதீனே
பருதியைக்கைப்பிடித்துப் பந்துவிளையாடுங்கோனே
பாவவினையைத்தீருஞ்சல்லாபா பகுதாததில்வாழ்
பாத்துஷாவெனும் பாக்கியத்தீபா

இறைவனொளிதனிலுதித்தோரே திரிலோகத்திற்கும்
ஏற்றமுச்சுடர்ப்பதிகுதித்தோரே
குறைஷிக்குலநபியென் கோமான் மகிழ்போரே
மறைவாகச்செய்பவத்தை மாற்றிவைக்குந்தீரரே
மாதவத்தவர் பணிந்திடும்பீரே பக்தரிதய
மாணிக்கமணித்தீபச்சர்தாரே.

திருடனுக்கொளித்தனமருள்தேவா திவ்யசஞ்சீவித்
திக்கீர் முழக்கத்திற்கொரு மூவா
புருடரெனவிளங்கும் புண்யப்ரபல்யபூமா
குருடனவனுக்கொரு கோலாக வந்தசீமா
குணங்குடிகொளுங்குருவே மெய்ப்பாவா லிவாவுல்
கொடிநிழல்தனிலடியனைக்காவா. (கம்மு

சகலபுவனவாதவிஸ்வாசா மங்காமெய்ஞ்ஞான
சாயுச்யபதந்தனக்குபதேசா
பகலுமிரவுமுமைப்பாடிப்புகழ்சிறியேன்
சுகமே பெறவருள்செய்சொல்லமற்றொன்றறியேன்
சுருளுமிருட்டு மாயையும் லேசா சுந்தரஞானச்
சூரியனெனப் பேர்பெறும் ராஜா.

விகஜிதவினைகமெய் மணியே திருநாமஞ்சொன்ன
வித்தகர்க்கொரு முத்துமாமணியே
புகலிடமும்மையன்றிப் பூவில்வேறுண்டோ நாதா
சுகுணசுரேசர்பதி தோன்றவருள் சமேதா
சுகிர்தாஞ்சித சுவர்க்கத்திற்கணியே பாத்திமாதவத்
தோன்றலாய்வருந்தூய்நவமணியே.

கடலிற்கவிழ்ந்தகப்பலையழைத்தீர் பனிரெண்டுவருடன்
கழிந்த வுயிரை மறுபடி நுழைத்தீர்
திடலிற்படைகளெல்லாந் திரட்டி கிஸ்தியில் வைத்து
முடமாங்குபிரகற்றி மோக்ஷத்தில் வைத்த சித்து
முச்சகம்புகழ் முத்திரை விழைத்தீர் சர்வாதிகார
மோனவிங்கிதமாகவே தழைத்தீர்.

மஹத்துவம்பெறும் மஹல்ல தீவிலே தீனைவிழைக்க
வானத்திலிருந்தோசைபூவிலே
சுகதுக்கம்விட்டகன்ற துரிதசிகாமணியே
அகதுக்குகந்தவெந்தன் ஆண்டகைக்கோரணியே
அற்புதந்தன்னை நடத்தும்நாவிலே என்றோதத்தேவை
அடைத்ததுமொரு சிறுகூ சாவிலே

தாரணியிற்பலவினைகளோடவே தங்கியிருக்கும்
சற்குருவுமைநிதமும் பாடவே
மூரணியில்லாதசிந்தைமுத்தர்கள்பலர்கூடி
வாணித்திருக்குங்கவி மாலைகோடாகோடி
வாக்கியங்களுக்கீடு தேடவே ஏழைமனதி
வாடுதேன்றிருப்பாதஞ்சூடவே.

மாணமென்பதை யனுவும் நம்பாது அன்யாயமான
வட்டி வஞ்சகப்பொய்மையுஞ்சூது
வாணவினோதமாக வாங்கி முதலடித்து
தாணித்னிற்புதைத்த சண்டாளனைப்பிடித்து
தள்ளல்நரகக்குளியை யல்லாது தஸ்த்தகிர்நாமம்
சாற்றிடக்கரை யேற்றல்தப்பாது

மதுராமுத்தமிழ்க்கவிமழை பொழியும் சீறாப்புராணம்
வழுத்துமுமறுப்புலவரிற் றெளியும்
கதியணிதவந்திரண்ட கான்முறைபூர்கவந்த
மதியமிர்தங்கவியை மகிழ்ந்துகொள்வீரேசொந்த
மைந்தனென்றிருபார்வையை விழியும் நாதரீங்சா
வாக்கியத்தின் சௌபாக்கியந்தெளியும்

---

இந்தஉடலைநம்பி இருக்கலாமா என்றமெட்டு
இராகம் இந்துஸ்த்தான் கவாய் தாளம் ஆதி

பல்லவி

சிந்தை மகிழ்ந்தருள்செய்ஜெய் லானியே
செய்கப்துல் காதிருமுகை தீனியே (சிந்தை)

அநுபல்லவி

விந்தை மிகுவி நோதா
வேதாம்பரின்ச மேதா
சந்தையுலகு சூதா
சாகிபேயன்னை பிதா (சிந்தை.)

சரணங்கள்

ஜோதிநிறையருஷில் துயில் மணியே
சொந்தமைந்தனின் பாலத்துயர் தணியே
வேதியர் தினந் துதி
விரும்பும் பதமே கெதி
காதிரே நவ நிதி
கருணை நிறைவா ருதி சிந்தை.

சூபனையழைத்த சுருதி வாயா
சுத்தமேடனை யொலியாக்கும் நேயா
சூரியர் பலர் கூடி
அரவிந்தச்சரண தேடி
வீரியமொடு பாடி
விளங்குந்துதிகள் கோடி சிந்தை

வாருதியிற்கவிழ்ந்த மாக்கலமே
வந்துசேர்ந்திடச்செய்தீ ரடைக்கலமே
தேறுத லும்மை யன்றி
தெரியேன் புவியி லொன்றி
கூறுவதிது நன்றி
குருமுகையதீன் வென்றி சிந்தை

தேவைக்கூசிலடைத்த திவ்ய பூமா
தேங்கமழ்சோலை பகுதாதின் சீமா
சேவைதருசு சீல
சிரியனுக்கநு கூல
நாவை நட்டன லோல
நயம்பெறப் புரி மூல சிந்தை

சீருவு மர்மாயில் தினந்துதியே
செப்புமதியமிர்தஞ் சீர்கதியே
மாருமவுன யோகம்
வருகச்செய்யும் விவேகம்
கூருத முறை பாகம்
கொடுப்பீரிதேதல் யோகம் சிந்தை

---

துல்வு முசல்மன்பயிட்ட இசாரே என்ற வர்ணமெட்டு.

இராகம் சாவேரி தாளம் ஆதி.

கண்ணிகள்

யா முகைதீனல்துல் காதிர் ஜெய்லானி
யாண்டகைபதமலரடி துதிப்பாய் மெய்
யாண்டகைபதமலரடி துதிப்பாய் யாமு

ஆதியொளிவிற் பிரிந்தானந்த முச்சுடரில்
அற்புத நடனங்கள் மிகப்புரிந்தார் ஜல்
அற்புத நடனங்கள் மிகப்புரிந்தார் யாமு

தக்கவிறைராருஷில் சரதகித்திரைசெய்து
தஸ்த்தகீரெனத்திருநாமம் பெற்றார் ஜல்
தஸ்த்தகீரெனத்திருநாமம் பெற்றார் யாமு

கெற்பக்குவளரையிலுற்பவித் திருக்கையில்
கேடுள்ளபூதமதை மடியச்செய்தார் ஜல்
கேடுள்ளபூதமதை மடியச்செய்தார் யாமு

வானமர் கதிரவன்றனை வைத்து விளையாட
வள்ளல் முகையதீனெனப்பிறந்தார் ஜல்
வள்ளல் முகையதீனெனப்பிறந்தார்

இல்முபடிக்கச்செல்லும் வழியில் தடுக்குங்கள்ளர்
இருகண்மறையவும் பின் றெறியச்செய்தார் ஜல்
இருகண்மறையவும் பின் றெறியச்செய்தார் யாமு

வாதுபுரியும் மலைத்தேவைக்கூசிலடைத்தும்
மகல்லதீவதிலேதீன் பயிர் விளைத்தார் ஜல்
மகல்லதீவதிலேதீன் பயிர் விளைத்தார் யாமு

கடலிற் கவிழ்ந்த கப்பலதிலிருந்தவர்க்குநற்
கடிமணம்புரிந்திட வரவழைத்தார் ஜல்
கடிமணம் புரிந்திட வரவழைத்தார் யாமு

மதுரமுத்தமிழ்மதியமிர்தமுரைத்த கவி
மாலையணிந்த நவமணிப்புயத்தார் ஜல்
மாலையணிந்த நவமணிப் புயத்தார் யாமு

இராகம் சுருட்டி தாளம் ஆதி

காக்ஷி யற்புதந்தானே அப்துல்
காதிரு முகைதீனே திருச்
சூக்ஷியப் பெருமானே வுமைத்
தோத்திரம்புரிந்தேனே ஜெக

ஜோதிமுச்சுடர் வீதியைச் சரி
பாதிவைத்துயர் நீதியைப்புரி

சோபனப் பிரஸ் தாபா புகழ்
சோபிதத்தனி லரபா வரும்
ஆபத்தகற்றுந் தீபா இறை
அருஷிலுறங்கும் பூபா புவி

ஆசைகொண்டொளி வீசுசெங்கதிர்
மாசறும்படி தேசணிந்தமெய்

ஆதியந்தவி நோதா மக்க
ஆலகபிச மேதா செழுஞ்
சோதிதங்கிய யாதா சதா
துதிக்கு மேழைமேல்வாதா கெடுஞ்

சூதுடன் வரு பாதகம் புரி
தீதனும் மொலி நீதிகண்டிடச்

சொல்லலங்கிர்த வரயா வங்கந்
துரை வரச்செய்சகாயா பெரும்
வல்லவனொளி நேயா கவி
மா மகத்துவத் தூயா சுக

வாக்கருளுஞ் சௌ பாக்கியமுறை
யாக்குமென்றிறை தாக்கியபடி

வாட்டினீர் மலைத்தேவை அங்கு
மாண்டபிணமூஞ் சேவை செய்யச்

சூட்டினீர் திரு நாவை திருச்
சுவர்க்கரஞ்சிதப்பாவை மொழி
சோலைகற்பக சாலையற்புத
மாலைமுத்தமிழ் நூலை நித்தமும்
சூடிக்கொண்ட விலாசா கோடி
சூரியப்பிரகாசா முகம்
வாடிடாதரு ளீசா துதி
மதியமிருதம் நேசா நவ
யானலிங்கித மோனமுங்கிய
தீனலங்கிர்த ஞானமங்களக் காக்ஷி.

காக்ஷிகண் காக்ஷியே என்ற வர்ணமேட்டு

இராகம் தேசிகம் தாளம் ரூபகம்

பல்லவி

ஆண்டகை யாண்டகை அப்துல்காதிர்முகைதீன்
ஆண்டகை யாண்டகை அப்துல்— ஆண்ட

அநுபல்லவி

வேண்டியவரங்கள்தரும் வித்தகனெனும் முகைதீன் ஆண்ட

சரணம்

பூண்டபரிபூரணமெய்ப் பொக்கிஷத்தின் புண்ணியர்
பூத்தேழுலகுந்துதிக்கும் பூர்வீகலா வண்ணியர்
சேண்டவழ ருஷில்துயில் செய்திருக்கும் கண்ணியர்
செங்கதிரோனையழைத்த செய்கெனுங்காருண்ணியர்

சித்திரச்சுடரிலிவ ரொன்று நன்மை
செய்வதிலிவர்கருணைக் குன்று அவர்
புத்திரரான நமக்கு மன்று காணப்
போதித்தாரனேக மாயமு யன்று

புதியசுகந் தேடும்
பொய்மையகன் றோடும்
மதியமிர்தம் பாடும்
வாக்கில்நயங் கூடும் குரு ஆண்டகை

மாண்டவர்பிழைக்கத்திரு வாக்கியமுரைத்தவர்
மக்கநபி தீனிலிஸ்லாம் மார்க்கத்லைத நிரைத்தவர்
தூண்டியபூதப்பசாசைத் தூண்டித்துக்குரைத்தவர்
துர்விஷயப்பாவவழி தூர்ந்திடக் கரைத்தவர்
துங்கமகற யிங்கிதசு சீலம் பெறத்
தோன்றியதனாலே யநு கூலம் அருள்
பொங்கவரும் மங்களமெய்மூலம் நம்பி
போற்றிட நமக்கு நல்லகாலம்

புதையலது போலும்
பூத்தது மென் மேலும்
மதியமிர்தம் நாலும்
வாய்த்த தேனும் பாலும் குரு ஆண்டகை

## மங்களம்

இங்கிலீஷ் பியாண்ட் நோட்

இராகம் காபி தாளம் ஆதி

பல்லவி

மங்களம் மங்களம் மங்களமே சுப
மங்களம் மங்களம் மங்களமே. (மங்க)

அநுபல்லவி

மங்களமாமுற செங்கும் விளங்க
மகத்துவந்தங்கிய மங்களமே (மங்க)

சரணம்

ஆதிபரம் பொருளம்பர மாகிய
அஹதுக்குஞ் செய மங்களமே

ஜோதிமிகும் பிரகாச நபி யிற
சூலுக்குஞ்செயமங்களமே— (மங்க)
சாதிக்குறைஷிக்காஷீங் குலநபி
சரணத்திற்கும் மங்களமே
நீதிகொள் நான்கு யார்கட்குஞ்சொல்
நித்தியமுஞ்செய மங்களமே (மங்க)
நங்கையர் நாயக மாகிய பாத்திமா
நாச்சியாருக்கும் மங்களமே
சிங்கபுலியலி மகனசைனுசனின்
சேவடிகட்கும் மங்களமே (மங்க)
காதிர்முகையதீ னென்னும் மிரு
கண்ணின்மணிக்கும் மங்களமே
தீதகல்சாகுல் கமீதொலிநாயக
செல்வர்க்குஞ் செயமங்களமே (மங்க)
பூமியும்பொன்னுலகும் புகழொலிமார்
பூம்பதங்கட்கும் மங்களமே
மூமீன்முஸ்லீமாகிய துணைவர்கள்
முன்வருகச்செய மங்களமே (மங்க)
சீருக்கவி மொழியுமருக்குமவர்
செல்வக்கிளைக்கும் மங்களமே
மாருமதுரக்கவி மணிமுத்தமிழ்
மதியமிர்தஞ்சொல் மங்களமே. (மங்க)

ஹ்ரீம்

# மதியமிர்த சஞ்சீவி

## வைத்தியசாலை

வெக்காலிப்பட்டி, கடையம் போஸ்டு.

இவ்வைத்தியசாலையில்? ஏழைமுதல் தனவந்தர் வரையிலுமுள்ள சகல அன்பர்கட்கும் பொதுவாய் அவரவர் சக்திக்குத் தகுந்த விதத்தில் குறைந்த சார்சுக்கு மிகவும் மகத்துவந்தங்கிய ஔஷதங்களைப்பிரயோகம் செய்யப்படுகிறது சிறுகிராமங்களில் வசிக்கும் அன்பர்களின் சௌகரியத்துக்காக 1300—வருடமாக எமது முன்னோர்களின் அநுபவத்திலிருந்த அநேக திவ்யமுறைகளைத் தயாரித்து ஏஜண்டுகளின் மூலமாயும் நேரிலும் விற்பனை செய்யப்படுகிறது மருந்துகளின் விபரம், நயம் கஸ்தூரி கோரோசனை முத்துப்பற்பம், தங்கபற்பம், வெள்ளிபற்பம், பவளபற்பம், நாக பற்பம், வங்க பற்பம், தாம்பர பற்பம், அயப் பற்பம், மூப்பும் பதங்கம், சாம்பிராணிப் பதங்கம், வீரப்பதங்கம், தாளகபற்பம், தாளகசெந்தூரம் அயச்செந்தூரம், அயக்காந்த செந்தூரம், நாகசெந்தூரம், வங்கசெந்தூரம், கெந்தகபற்பம், கெந்திமெழுகு. ரசகெந்திபற்பம், லிங்கக்குழம்பு, அயக்குழம்பு, பஞ்சலவணமெழுகு திருநேத்ரமை, கபாடசெந்தூரம், தாளச் செந்தூரம், அண்டச்சுன்னம், பவளச்சுன்னம், உப்புச்சுன்னம், மும்மணிமெழுகு, அயப்பவளபற்பம், நாகத்தாம்பரபற்பம், திக்திப்புசுகபேதிக்குழம்பு, மேகரோகநிவாரணி, சிவசஞ்சீவிக் குளிகை, [illegible]ரோகக்குளிகை, பூபதிக்குளிகை. இராஜபூபதி மாத்திரை, வஜ்ஜிரதந்தபற்பொடி, பஞ்சலவணச்சூரணம், அஸ்வகெந்திச்சூரணம், சுக்குலேகியம், கடுக்காய்லேகியம், திரிகடுகு லேகியம், பஞ்சதீபாக்கினி லேகியம், நெல்லிக்காய் லேகியம், கட்டுவாதிலேகியம். தாதுபுஷ்டி சிட்டுக்குருவிலேகியம், மன்மத லேகியம், வெட்டிவேர்தைலம், வில்வாதித்தைலம், சந்தனாதித் தைலம், இரணக்களிம்பு, கிரந்த நிவாரணி, படைகள் சங்காரன் கணை நிவாரணி இன்னும் அநேக விதமருந்துகளும் தயாரிலிருக்கிறது ஒருமுறைவாங்கியுபயோகித்துப்பார்த்தால் உண்மைவிளங்கும் நேரிலும் வி. பி. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம் பதில் விரும்புவோர் ஒரு அணா லேபில் அனுப்ப வேண்டும்.